10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 272 செவ்வாய்க்கிழமை 20 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

கச்சதீவு அந்தோனியாரையும்

## விட்டுவைக்காத 'நல்லிணக்கம்'

யாழ்ப்பாணம், பெப். 20

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருவிழாவில் தமிழ், சிங்கள மொழிகளில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

'கச்சதீவு அந்தோனியார் ஆலயப் 06▶



காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடித்தருமாறும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறும் கோரி கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் நடத்தப்படும் உண்ணாவிரத, எதிர்ப்புப் போராட்டம் நேற்றுடன் ஒரு வருடத்தை எட்டியது.
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று நடத்திய போராட்டத்தின் போது...

## பட்டம் விட்ட சிறுவன் கிணற்றில் வீழ்ந்து பலி!

சாவகச்சேரி, பெப். 20

பட்டம் ஏற்றிக் கொண்டிருந்த சிறுவன் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

சாவகச்சேரி கல்வயலில் நேற்று மாலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இதில், ஜெயக்குமாரன் தீசன் (வயது 16) என்பவரே மரணமானார்.

வயல்வெளியில் பட்டத்தை ஏற்றிக் கொண்டு பின்பக்கமாக ஓடிய சிறுவன் கிணற்றில் வீழ்ந்து மரணமானார் எனக் கூறப்பட்டது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, உறவினர்களிடம் வழங்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்துடன், ' இவ்வருடத்தில் மாத்திரம் பட்டம் ஏற்றியவர்கள் மூவர் சாவடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## பொறுத்திருங்கள்!

கட்சியினரிடம் ஜனாதிபதி



கொழும்பு, பெப்.20

தேசிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அவசரப்பட்டு தீர்மானங்கள் எதனையும் எடுக்க வேண்டாம். இன்னும் ஒரு மாதம் பொறுத்திருந்து பார்க்கலாம் என சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்று சந்தித்துப் பேசினார்.

இதன்போது எதிர்வரும் காலப்பகுதியில் அதிரடியான நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளார் என்றும் அவர்களுக்கு ஜனாதிபதி சொன்னார். (இ)

# தமிழீழம் பிறக்கும்

## தாமரை மொட்டிலிருந்தே



கொழும்பு, பெப்.20,

"தமிழீழம் பிறக்குமாயின் அது மகிந்த ராஜபக்ஷவின் காலத்திலேயே பிறக்கும். ஒன்றிணைந்த இலங்கைக்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வையே நாம் கோருகின்றோம். தமிழீழக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கவில்லை." – என்று நேற்று நாடாளுமன்றில் கோபம் வெளிப்படப் பேசினார் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான 06▶

மீண்டும் பயங்கரம் மானிப்பாயில்!

## கொள்ளைக்காக மூதாட்டி கொலை

மானிப்பாய், பெப்.20

தனிமையில் வசித்த மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். "வீட்டின் ஓடுகள் கழற்றப்பட்டுள்ளமையால் கொள்ளையர்களே அவரைக் கொன்றிருக்கலாம்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய், கட்டுடையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரத்தினதேவி (வயது 74) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

மூன்று நாள்களாக மூதாட்டியைக் காணாததால் அயலவர்கள் தேடிச் சென்றுள்ளனர். அங்கு மூதாட்டியின் சடலம் அழுகிய நிலையில் உருக்குலைந்து காணப்பட்டது.

அயலவர்கள் உடன், மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் அளித்தனர். இதையடுத்துப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

மானிப்பாயில் கடந்த மாதமும் தனிமையில் வசித்த மூதாட்டி ஒருவர் நகைக்காக அடித்துக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச -இ)

தங்கையை வன்புணர்ந்தவருக்கு

## 10 ஆண்டுகள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், பெப். 20

ஒன்றுவிட்ட சகோதரியை வன்புணர்ந்து தாயாக்கியவருக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்தது யாழ். மேல் நீதிமன்றம்.

வடமராட்சி - பருத்தித்துறையில் 2010 ஜூன் முதலாம் திகதி நடந்த இச்சம்பவத்திற்கு நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றுத் தனது தீர்ப்பை வழங்கியிருந்தார்.

14 வயதான சிறியதாயின் மகளையே குடும்பஸ்தரான குற்றவாளி பாலியல் வன்புணர்வுக்கு இரு தடவைகள் உட்படுத்தினார்.

இது தொடர்பில் பருத்தித்துறை நீதிவான் 06▶

## உயர் நீதிமன்ற தீர்ப்புவரை தேசிய அரசாங்கம் தொடரும்



கொழும்பு, பெப்.20,

உயர் நீதிமன்றத்தின் சட்ட விளக்கம் கிடைக்கும் வரை தேசிய அரசாங்கத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுமாறு ஜனாதிபதி தமக்கு ஆலோசனை வழங்கினார் எனப் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

"தேசிய அரசாங்கத்தின் பங்காளியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேசிய அரசாங்கத்தை அமைத்தது. அரசாங்கத்தில் இருந்து விலக நாங்கள் ஜனாதிபதியிடம் அனுமதி கோரினோம். ஜனாதிபதி எமது கட்சியின் தலைவர் என்ற வகையில் நாங்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தோம். 06▶

## வேலையற்ற பட்டதாரிகள் மீண்டும் போராட முடிவு

யாழ்ப்பாணம், பெப். 20

வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற அரசாங்கம் தவறிவிட்டது. இதனால் மீண்டும் தொடர்ச்சியாகப் போராட்டத்தை நடத்தப் போவதாக வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர். வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று யாழ். மாவட்ட செயலகம் முன்பாகக் கூடி கலந்துரையாடினர். இதிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. முன்னர், வேலையற்ற பட்டதாரிகள் 143 நாள்கள் போராட்டம் நடத்தியிருந்தனர். அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்படும் என அரசாங்கம் அவர்களுக்கு உறுதி வழங்கியிருந்தது.

இந்நிலையில், "வழங்கப்பட்ட உறுதிமொழி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. வரும் வாரங்களுக்குள் எமக்கு அரசாங்கம் தீர்வு வழங்க வேண்டும். இல்லையேல் நாம் தொடர்போராட்டத்தில் ஈடுபடுவோம்" என்று வேலையற்ற பட்டதாரிகள் கூறினர். (ச)



# தமிழ்-முஸ்லிம்களை மிரட்டும் மகிந்தவின் எழுச்சி

ம.கார்த்திகேயன்

ஆட்சியில் வங்குரோத்து நிலை அடைந்துவிட்டால் அதைச் சரி செய்வதற்கு எடுக்கப்படும் ஆயுதம் இனவாதம்தான். சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக பெரும்பான்மை இன மக்களின் உணர்வைத் தூண்டி அதனூடாக அரசியல்வாதிகள் தங்களின் வங்குரோத்து நிலையை சரி செய்துகொள்வர்.

இந்த வங்குரோத்து அரசியல் நிலை ஒரு கட்சிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. யார் வீழ்ச்சியடைகிறார்களோ அவர்கள் இந்த இனவாத ஆயுதத்தைக் கையில் எடுப்பர்.

இதனால் இலங்கை போன்ற நாடுகளில் சிறுபான்மை இனங்களாக வாழும் தமிழ்–முஸ்லிம் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். தமிழர்களை நசுக்கி அவர்களுக்கு எதிராக பெரும்பான்மை இன மக்களின் உணர்வுகளைத் தூண்டி இவ்வளவு காலமும் அரசியல் செய்து வந்த பேரின அரசியல்வாதிகள் யுத்தம் முடிந்ததும் அடுத்த சிறுபான்மை இனமான முஸ்லிம்களின் பக்கம் திரும்பினர்.

யுத்தத்தை முடித்து வைத்த அரசு ஊழல், மோசடிகள் காரணமாக மக்கள் செல்வாக்கை இழக்கத் தொடங்கியதும் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தின் ஊடாக இழந்த செல்வாக்கை மீளப் பெறுவதற்கு திட்டமிட்டது.

அதன் விளைவாக பொதுபலசேனா உள்ளிட்ட பல பேரினவாத அமைப்புகள் உருவாகின. அத்தனை அமைப்புகளும் பௌத்த தேரர்களைக் கொண்டு நன்கு திட்டமிடப்பட்ட அடிப்படையில் உருவாக்கப்பட்டிருந்தன.

அந்த அமைப்புகள் நாடுபூராகவும் முஸ்லிம்களுக்கு எதிராக செய்யப்படத் தொடங்கின.இனவாதப் பிரசாரங்களைக் கொண்டு சென்றன.இறுதியில் அளுத்கமவில் பெரும் கலவரத்தை உண்டு பண்ணி முஸ்லிம்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பெரும் சேதங்களை உண்டு பண்ணின.

அத்தோடு நின்றுவிடாமல் ஏனைய இடங்களுக்கும் அந்தக் கலவரத்தைக் கொண்டு செல்வதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டன. இந்த நிலையில்தான் முஸ்லிம்கள் மகிந்தவின் ஆட்சியை கவிழ்த்து தமக்குப் பூரண பாதுகாப்பைத் தரக்கூடிய ஆட்சி ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி செய்தனர்.

ஒரு புறம் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டிக்கொண்டு மறுபுறம் முஸ்லிம்களையும் தமிழர்களையும் மோதவிடும் வேலைகளையும் செய்யத் தொடங்கினர். இனவாதம் கொண்ட ஒரு சில தமிழர்களை பொதுபல சேனா அதன் அமைப்பில் இணைத்து முஸ்லிம்களுக்கு எதிராகக் பிரசாரம் செய்ய வைத்தது.

தமிழ் அரசியல் தலைமைகளையும் அதற்குள் இழுத்துவிடுவதற்கு பொது பல சேனா முயற்சி செய்தது. ஆனால், அவர்கள் தெளிவாகவே இருந்தனர். முஸ்லிம்களையும் தமிழர்களையும் மோதவிட்டு தமிழர்களுக்கான அரசியல் தீர்வு முயற்சியை திசை திருப்பும் அரசின் சதித்திட்டங்களுல் இதுவும் ஒன்று என்பதைத் தெளிவாக விளங்கி வைத்திருந்த தமிழ் அரசியல் தலைமைகள் அந்த இனவாதத்தை நிராகரித்தன.

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தை ஒருபுறம் தூண்டிக்கொண்டு மறுபுறம் தமிழர்களுக்குச் செய்ய வேண்டிய அத்தனை அநியாயங்களையும் செய்து வந்தது மகிந்த அரசு.

இதனால் இலங்கையில் வாழும் சிறுபான்மை இன மக்கள் அனைவரினதும் எதிர்ப்பை மகிந்த சம்பாதித்தார். மதரீதியாகப் பார்க்கும்போது கிறிஸ்தவ மதமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டது. இதனால் தமிழ்–முஸ்லிம் மக்களும் தமிழர்களாகவும் சிங்களவர்களாகவும் உள்ள கிறிஸ்தவர்களும் பாதுகாப்பற்ற நிலையை உணந்தனர். தங்களை பாதுகாத்துக்கொள்வதற்கான வழி வகைளை இந்த மக்கள் தேடினர். மகிந்தவை ஆட்சியில் இருந்து கவிழ்ப்பதுதான் அதற்கான ஒரே வழி என்பதை உணர்ந்தனர்.

அதற்கான வழிவகைகளை மகிந்தவே ஏற்பாடு செய்து கொடுத்தார்.அவரது ஜனாதிபதியாக இருப்பதற்கான பதவிக் காலம் முடிவடைவதற்கு இரண்டு வருடங்கள் இருக்கின்ற நிலையில் முன்கூட்டியே தேர்தலை நடத்தி அவர் கையாலேயே அவர் தலையில் மண் அள்ளிப் போட்டுக்கொண்டார் மகிந்த. அந்தத் தேர்தலை சரியாகப் பயன்படுத்திய தமிழ்–முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக ஒன்றிணைந்து நின்று மகிந்தவை கவிழ்த்தனர்.

மகிந்தவின் இனவாதம் தோற்றுப் போனது. தன்னை தமிழ்–முஸ்லிம் மக்கள்தான் தோற்கடித்தார்கள் என்பதை மகிந்த அவ்வப்போது நினைவுபடுத்திக் கொண்டே இருந்தார். ஆனால், மகிந்தவை இவர்கள் தோற்கடித்தார்கள் என்பதைவிட தங்களை பாதுகாத்துக்கொள்வதற்கான ஓர் ஏற்பாட்டைச் செய்தனர் என்பதே உண்மை. சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான இனவாதத்தைக் கட்டுப்படுத்தி இருந்தால் மகிந்த இப்போதும் ஜனாதிபதி.

இந்த நிலையில்தான் இப்போது நடந்து முடிந்துள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த வெற்றிகண்டுள்ளார். இந்த எழுச்சியைக் கண்டு தமிழ்–முஸ்லிம்கள் அஞ்சத் தொடங்கியுள்ளனர். இந்தத் தேர்தல் வெற்றியின் ஊடாக மகிந்தவால் எதுவும் செய்ய முடியாது. இருந்தும், இந்த வெற்றி அலை மகிந்தவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வந்துவிடுமோ என்று அஞ்சுகின்றனர். அப்படி அவர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ்–முஸ்லிம்கள் மீண்டும் தாக்கப்படுவர் என்று அஞ்சுகின்றனர்.

தான் விட்ட தவறை எண்ணி மகிந்த மனம் மாறுவாரா அல்லது பழிக்குப் பழி வாங்குவாரா என்ற சந்தேகம் இந்த மக்களின் மனங்களில் எழுந்துள்ளது. தேர்தல் முடிவுகளை வைத்துப் பார்த்தால் ஓர் உண்மையை எம்மால் உணர முடிகின்றது. மகிந்தவுக்கு கிடைத்திருப்பது வெற்றி என்ற மாயையே தவிர உண்மையான வெற்றியல்ல என்பதுதான் அந்த உண்மை.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த பெற்ற வாக்குகளை விட எட்டு லட்சம் வாக்குகளை அவர் குறைவாகவே பெற்றுள்ளார். மகிந்தவுக்கு எதிரான வாக்குகள் பல கட்சிகளுக்குப் பிரிந்து சென்றதாலும் மகிந்தவுக்கான வாக்குகள் அப்படியே அவரது கட்சிக்கு அளிக்கப்பட்டதாலுமே மகிந்த வெற்றி பெற்றார்.

உண்மையில் ஜனாதிபதித் தேர்தலைப்போல் மைத்திரிக்கு ஆதரவாக நின்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நின்றிருந்தால் மகிந்த படுதோல்வியடைந்திருப்பார். இருந்தாலும், மகிந்தவின் வீழ்ச்சி மூடி மறைக்கப்பட்டு அவர் பெரும் வெற்றிபெற்றார் என்றொரு பிரசாரம் செய்யப்படுகின்றது.

இந்தப் பிரசாரம் ஒரு பாரிய அலையை ஏற்படுத்தி ஆட்சியைப் பிடிக்கும் நிலைக்கு இட்டுச் செல்ல முடியும். அவ்வாறு மகிந்த ஆட்சியைப் பிடித்தால் தமிழ்–முஸ்லிம்கள் பழிவாங்கப்படுவார்களா் பழைய பேரினவாதக் குழுக்கள் எல்லாம் தலை தூக்குமா என்ற கேள்வி இப்போது இந்த மக்கள் மத்தியில் எழுகின்றது. அவர்கள் உண்மையாகவே அச்சமடையத் தொடங்கியுள்ளனர்.

அவரது ஆட்சியை கவிழ்ப்பதற்கு காரணமாக அமைந்த அந்தப் பழைய பிழையை அவர் மீண்டும் செய்வாரா அல்லது பழிவாங்கியே தீருவாரா என்று சிறுபான்மை இன மக்கள் இப்போது கேள்வி எழுப்புகின்றனர்.

மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பொது பால சேனா மேலும் பலமடையும் என்றும் அலுத்கம போன்று மேலும் பல இடங்களில் கலவரம் வெடிக்கும் என்றும் முஸ்லிம்கள் அஞ்சினர். அந்த ஆபத்துக்களில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்வதற்காகவே முஸ்லிம்கள் மகிந்தவுக்கு எதிராக வாக்களித்தனர்.

அதேபோல், அரசியல் தீர்வு முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து வடக்கு–கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை துரிதப்படுத்துவர்தம்மை மீண்டும் அடக்குவார் என்று தமிழர்கள் அஞ்சுகின்றனர். அடுத்த ஜனாதிபதியாக மகிந்தவின் ஆசியைப் பெற்ற அவரது சகோதரர் கோட்டா வந்தால் இந்த அச்சம் உண்மையாகிவிடும் என்பது நிச்சயம் நிலைமை மோசமாகிவிடும்.

ஆகவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலிலோ ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்–முஸ்லிம் மக்களே மாற வேண்டும். இப்போதே நாம் ஒன்றிணைந்து நிற்க வேண்டும். ■

எதிரொலி Ethiroli
செவ்வாய் 20 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# முடிவிலிப் போராட்டம்

தங்கள் பிள்ளைகளின் கதி என்னவென்று வெளிப்படுத்தக் கோரி, கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் தொடங்கப்பட்ட சாத்வீகத் தொடர் போராட்டம் இன்றுடன் ஒருவருடத்தைத் தொட்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தின் ஓராண்டு நிறைவில் அதன் தாக்கத்தை அனைவரும் உணரச் செய்யும் வகையில், கடையடைப்பு ஒன்றுக்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், பிசுபிசுத்துப் போயுள்ளன. தொடர்ச்சியான –அர்த்தமற்ற கடையடைப்புகளால்–களைத்துப் போய்விட்ட வர்த்தகர்கள், மக்களாலேயே நடத்தப்படும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு கொடுக்கும் வகையில், அடையாளக் கடையடைப்புக்கு மறுத்து விட்டார்கள். தொட்டதெற்கெல்லாம் ஹர்த்தாலும் , கடையடைப்பும், ஆர்ப்பாட்டமும் வைக்கத் தொடங்கினால், அவசியமான போராட்டங்களுக்கு கூட பொது அமைப்புக்களின் ஆதரவு கிட்டாமல் போய்விடும் என்பதற்கு இந்தச் சம்பவம் நல்லதொரு எடுத்துக்காட்டு.

உண்மையில், கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த நெடும் போராட்டம், ஒரு வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டபோது, ஒரு சில நாள்கள் கந்தசாமி கோயிலடியில் குந்தியிருந்துவிட்டுக் கலைந்து விடுவார்கள் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் தங்கள் போராட்டத்தில் மிகத் தெளிவாக இருந்த, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஒரு முடிவு கிடைக்கும்வரை இருக்குமிடத்தை விட்டு அசையாமல் இருக்கிறார்கள். இந்த ஒருவருடத்துக்குள் ஜனாதிபதி, முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலை–வர், எம்.பிக்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்தப் போராட்டக்காரர்களைச் சந்தித்து, ஆறுதல் வார்த்தைகளும், உறுதிமொழிகளும் வழங்கியிருந்தார்கள்.

ஆனால் அவையெல்லாமே கடலில் போட்ட கற்கள்தான். எந்தப் பலனும் இல்லை.

அரசாங்கம் நினைத்திருந்தால், இவர்களின் போராட்டத்துக்கு மிகச் சுலபமாகத் தீர்வைக் கண்டிருக்கலாம். தங்கள் உறவுகளைக் காணாமல் ஏங்கிக் கொண்டிருக்கும் இவர்களின் துயருக்குக் காரணம், பேய் பிசாடுகளோ அன்றில் வேறுக்கிரக வாசிகளோ அல்லர்.

இலங்கை இராணுவமும், அதன் துணைக்குழுக்களுமே இப்போது போராட்டம் நடத்துபவர்களின் பிள்ளைகளையும், கணவர்களையும், சகோதரர்களையும் காணா–மல் போகச் செய்தன. குறிப்பாக போருக்குப் பின்னர்தான், இவர்களில் அதிகளவானோர் காணாமால் ஆக்கப்பட்டிருந்தனர். அதுவும் இறுதிப்போரின் கடைசி நாட்களிலும், அதன் பின்னரான நாட்களிலுமே கூண்டோடு பலர் படையினரால் கொண்டு செல்லப்பட்டனர். அதன் பின்னரே அவர்கள் காணாமலாக்கப்பட்டோராக மாறினர். எனவே, இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று அறிவது, அரசுக்கொன்றும் அவ்வளவு சிரமமான காரியமல்ல. அந்தக் காலகட்டத்தில், களமுனையில் இருந்த படையினரையும், படையதிகாரிகளையும் பிடித்து விசாரித்தாலே போதும். உண்மை உடனேயே வெளிவந்து விடும். போதாக்குறைக்கு யாரிடம் தங்கள் உறவுகளைக் கையிலே கொடுத்தோம் என்று அடையாளத்தோடு, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சொல்கிறார்கள். அதைவைத்தே, இறுதிப்போரில் பங்குபற்றிய படையினரில் யார், யார் இந்தக் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் தொடர்புடையவர்கள் என்று சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம். ஆனால் அதைச் செய்யாமல், காணமால் போனவர்களைக் காணோம் என்று கதைவிட்டுக் கொண்டிருக்கிறது அரசு. பாவம், போராட்டக்காரர்கள், தங்கள் உறவுகள் என்றோ ஒருநாள் வருவார்கள் என்ற நம்பிக்கையோடு, ஒரு வருடத்தையும் தாண்டி போராடிக் கொண்டே இருக்கிறார்கள்.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”



# ஓட்டோ கவிழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.20

நாவலப்பிட்டியில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நாவலப்பிட்டி ஹப்புகஸ் தலாவ பகுதியிலிருந்து ருவான்புர கிராமத்துக்குச் சென்றுக்கொண்டிருந்த, குறித்த ஓட்டோ நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ருவான்புர ஹப்புகஸ்தலாவ வீதியில் ருவான்புர பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்வாறு விபத்தில் உயிரிழந்தவர் ருவான்புர பகுதியை சேர்ந்த ரஞ்சித்குமார (வயது - 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஓட்டோச் சாரதியும், அதில் பயணித்தவரும் மதுபோதையில் இருந்ததாகவும், ஓட்டோவின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஹன்ரர் விபத்து ஒருவர் காயம்

பூநகரி, பெப்.20

ஹன்ரர் ரக வாகனம் தடம் புரண்டணதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் மன்னார் - யாழ்ப்பாண வீதியில் உள்ள பூநகரி 4ஆம் கட்டையில் இடம்பெற்றது .

நீர்கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருட்களை ஏற்றி வந்த ஹன்ரர் வாகனம் பாதையில் இடறி, தடம் புரண்டு பள்ளத்தில் வீழ்ந்தது. இதில், ஹன்ரரில் பயணித்த மூவரில் ஒருவர் கால் மற்றும் கையில் காயமடைந்தார்.

இத்தாலியில் இருந்து வந்த பொருள்களை ஏற்றி வந்த ஹன்ரரே விபத்துக்குள்ளானது. பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# ஹரிஸ்ணவிக்கு நீதி வேண்டும்

## தாயார் உருக்கமான வேண்டுகோள்

வவுனியா, பெப்.20



வவுனியாவில், மாணவி ஹரிஸ்ணவி வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் “நீதியைப் பெற்றுத்தர ஊடகங்களினாலேயே முடியும்” என ஹரிஸ்ணவியின் தாயார் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

“கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி பாடசாலை மாணவியான எனது மகள் ஹரிஸ்ணவி 14வயதில் வீட்டில் தனியாக இருந்தபோது ஈன இரக்கமற்ற பாவி ஒருவரால் பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்று கடந்த 16 ஆம் திகதியுடன் இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன.

இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இதுவரையில் எனது மகளுக்கு நீதியைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. நீதியைப் பெற்றுத்தர ஊடகங்கள் முன்வர வேண்டும். - ஊடகங்களாலேயே முடியும்.

எனவே வித்தியாவின் பாலியல் படுகொலையுடன் தொடர்புபட்ட குற்றவாளிகளுக்கு ஊடகங்களின் உதவியுடன் தண்டனை வழங்கப்பட்டுவிட்ட நிலையில் எனது மகளின் பாலியல்படுகொலையுடன் தொடர்புபட்ட நபருக்கு இன்னும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவில்லை, நீதியும் நிலைநாட்டப்படவில்லை.

இந்தச்சம்பவமானது மக்களின் மனதிலிருந்து மெல்ல மெல்ல மறைந்து சென்று கொண்டிருக்கின்றது. இவ்வாறான ஒரு சம்பவம் இனிமேல் எந்தத்தாய்க்கும் எமது நாட்டில் ஏற்பட்டுவிடக்கூடாது. இந்தக் குற்றத்துக்கு வழங்கப்படும் தண்டனை ஒரு பாடமாக அமைய வேண்டும்” எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்தப்பாலியல் படுகொலையுடன் தொடர்புபட்டுள்ளதாக ஹரிஸ்ணவியின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்

## தி இந்து பத்திரிகை வலியுறுத்தல்

சென்னை, பெப்.20,

யுத்தத்தால் தொடர்ந்தும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்ற தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனவும், இதன் மூலமே, அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியுமென்றும் இந்தியாவிலிருந்து வெளியாகும் தி இந்து பத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

தீர்வை வழங்கக் கூடிய அரசமைப்பொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், தேர்தல் தோல்வியை தேசிய நல்லிணக்கத்துக்கு எதிராகக் கொண்டுசெல்ல முயற்சிக்கும் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிக்க வேண்டாமெனவும், இலங்கையின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் இணைந்திருந்து தமது பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனாதிபதியின் கட்சியும் பிரதமரின் கட்சியும் அடைந்துள்ள தோல்வியானது, அவர்கள் இருவரும் இணைந்திருக்கும் தன்மையை உறுதியற்றதாக்கி உள்ளதெனத் தெரிவித்த அப்பத்திரிகை இந்தத் தோல்வியானது, வேலையின்மை மற்றும் நாடு முழுவதும் பரவி வரும் அதிக வறட்சி காரணமாகவே ஏற்பட்டுள்ளதெனச் சுட்டிக்காட்டியுள்ளது.(இ)

# மின்சார சபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்துக்கு முஸ்தீபு

கொழும்பு, பெப்.20,

எதிர்வரும் 14 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மின்சார சபை ஊழியர்களும் கொழும்புக்கு வந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. மின்சார சபையில் இடம்பெற்ற ஊழல்களுக்கு எதிராக இந்ததிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் நாட்களில் பிரதேச ரீதியாகவும் இவ்வாறான ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய சங்கத்தின் அமைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் இந்த கருத்தை தெரிவித்துள்ளார். (இ)

# வடக்கு இளையோர் படையில் இணைவு

யாழ்ப்பாணம், பெப்.20

வடக்கைச் சேர்ந்த 50 இளைஞர், யுவதிகள் இராணுவத்தின் தன்னார்வப் படையணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் 11 பேரும் உள்ளடங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் தேவை கருதி இவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இவர்கள் தற்சமயம் விவசாயத்துறை செயற்பாடுகளில் இணைக்கப்பட்டுள்ளதாகவும், இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு இராணுவச் சீருடைகளைத் தவிர, ஓய்வூதியக் கொடுப்பனவு, உள்ளிட்ட இராணுவத்தினருக்கான அனைத்து சலுகைகளும் கிடைக்குமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## இன்று நாளும் கோளும்

20.02.2018 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 08 ஆம் நாள்

பஞ்சமி காலை 03.23 மணி வரை | ரேவதி பி.ப. 12.58 மணி வரை | சித்தயோகம்

இராகுகாலம் 03.00 - 04.30 | சுபநேரம் மு.ப. 10.30 - 11.30 | எமகண்டம் மு.ப. 9.00 - 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | பெருமை | பொறுமை | அச்சம் | சிந்தனை | நலம் | விருத்தி | லாபம் | வரவு | சுகம் | பரிவு | தொல்லை |



# தூங்கினால் பிரதமர் பதவி இல்லை

தேர்தல் முடிந்து சுதந்திரக் கட்சி சார்பில் 'சுசில் பிரேமஜயந்த, ஜோன் செனவிரத்ன மற்றும் எஸ்.பி.திஸ நாயக்க ஆகியோர் மகிந்த தரப்பினருடன் பேச்சு நடத்தினர். ப்சில் ராஜபக்ச மற்றும் பந்துல குணவர்த்தன ஆகியோர் மகிந்த அணியின் சார்பில் கலந்துகொண்டனர்.

"ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கி வேறு ஒருவரை நியமித்து சுதந்திரக் கட்சியின் அரசு ஒன்றை நிறுவுவதற்கு தாம் தயார்" என்றும் "மகிந்த அணி விரும்பும் பதவியைத் தர முடியும்" என்றும் சுதந்திரக் கட்சி பிரதிநிதிகள் அந்தச் சந்திப்பில் கூறினர்.

"பதவிகள் எதையும் பெறுவதற்கு நாம் தயாரில்லை" என்று மகிந்தவின் பிரதிநிதிகள் கூறியதும் "அப்படியென்றால் நிமல் சிறிபால டி சில்வாவை பிரதமராக நியமிப்போம்" என்று சு.க பிரதிநிகள் கூறினர். "இது தொடர்பில் நாம் எமது கட்சியுடன் பேசி நல்ல முடிவைப் பெற்றுத் தருகிறோம்" என்று மகிந்த அணியினர் பதிலளித்தனர்.

மகிந்தவிடம் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டதும் இதுபற்றி முடிவெடுப்பதற்கு அன்றைய தினமே மகிந்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் கூட்டத்தைக் கூட்டினார்.

"சுதந்திரக் கட்சியுடன் நாம் ஒன்றிணைந்தால் அடுத்த தேர்தலில் நாம் கட்டுப் பணத்தைக்கூட மீளப் பெற முடியாமல் போகும்"என்று சனத் நிசாந்த அந்தக் கூட்டத்தில் கூறினார். "ரணிலை நீக்கி நிமலை பிரதமராக நியமிப்பதற்கு சுதந்திரக் கட்சி விரும்புகிறது நாம் என்ன முடிவெடுப்பது?" என்று பந்துல மகிந்தவிடம் கேட்டார்.


"பிரச்சினை இல்லை. அவர்கள் அவ்வாறே செய்யட்டும். நாம் அவர்களுடன் இணையாது எதிர்கட்சியிலிருந்து நல்லவற்றுக்கு ஆதரவு வழங்குவோம்" என்று மகிந்த பதிலளித்தார்.

அப்போது குறுக்கீடு செய்த சனத் நிசாந்த "நிமலை பிரதமராக நியமிப்பதற்கு ஆதரவு வழங்குவதென்றால் அவரை இனி நாடாளுமன்றில் தூங்க வேண்டாம் என்று நாம் நிபந்தனை விதிக்க வேண்டும்" என்று நகைச்சுவையாகக் கூறினார்.

அதைக் கேட்டு சிரித்த மகிந்த "ஆம். அத்தோடு, தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்க வேண்டும் என்றும் ஒரு நிபந்தனை விதிக்க வேண்டும்.நான் எத்தனையோ தடவைகள் அழைப்புகள் எடுத்தும் அவர் பதிலளிக்கவில்லை" என்று கூறினார்.

சிறிது நேரம் நிமலை மாறி மாறி கழுவி ஊத்திய பின்பே கூட்டத்தை நிறைவு செய்தனராம்.







# நெல்லியடியில் விபத்து

வடமராட்சி, பெப்.20

யாழ்ப்பாணத்தில் இருந்து நெல்லியடி நோக்கி வந்த கார் ஒன்றும், நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேற்று, நேருக்கு நேர் மோதுண்டன. இதன் போது, மோட்டார் சைக்கிளில் வந்தவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். (அ- 11)







# மாணவர் கௌரவிப்பு


வடமராட்சி, பெப்.20

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த சமயநிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது, யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் அ.குமாரவேல் சொற்பொழிவு ஆற்றினார். இதன்போது, மோகனதாஸ் சுவாமி மாணவர்களை கௌரவித்தார். (அ-11)

செல்லமுத்துஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
பெருமையுடன் வழங்கும்
IDM ACHIEVERS SPORTS FIESTA
2018
IDM ACHIEVERS SPORTS FIESTA - 2018
2015 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் தேசிய ரீதியிலான
போட்டிகளில் குழுவாகவோ அல்லது தனியாகவோ
பாடசாலை ரீதியாகவோ அல்லது கழகங்களுக்கூடாகவோ
பங்குபற்றியவர்களுக்கான
சான்றிதழ்களும் 30,000/= ரூபாவிற்கான
IDM Nelliady Campusன் பரிசு கூப்பனும் வழங்கப்பட
உள்ளதால் வட மாகாணத்தை சேர்ந்த தகுதியுடைய
வீரர்களை 076 868 6877 / 021 226 5959 எனும் இலக்கத்தில்
தொடர்பு கொள்ளவும்.
IDM
ஊடக அனுசரணை
எதிரொலி Ethiroli



# இரணைமடுவில் நீரில்லை சிறுபோகம் பாதிக்கும்



கிளிநொச்சி, பெப். 20

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் தற்போது 16.6 அடியாக இருப்பதனால் சிறுபோகம் நெற்செய்கை கேள்விக்குள்ளாகியுள்ளது என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னைய காலங்களில் இரணைமடுக் குளத்தில் 30 அடியாக நீர் சேமிக்கப்படுகின்ற போது பெப்ரவரி மார்ச் மாதங்களில் குளத்தின் நீர் மட்டம் 24 அடியாக காணப்படும். இந்த நிலையில் இரணைமடுக்குளத்தின் கீழ் 8000 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது கடந்த இரண்டு வருடங்களாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் இரணைமடுக் குளம் புனரமைக்கப்பட்டு குளத்தின் நீர் கொள்ளளவு 36 அடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த பருவ மழை போதுமானதாக இன்மையால், புனரமைக்கப்பட்ட குளத்தில் போதுமானதாக நீர் சேமிக்க முடியாத நிலையில் தற்போது 16.6 அடியாகக் காணப்படுகிறது. இந்த நிலை தொடருமானால் இவ்வருடம் சிறுபோகம் விதைப்பு சாத்தியப்படாது போய்விடும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் பெரும்பாலும் மழைபெய்வது வழக்கம்.அவ்வாறு வரும் மார்ச் மாதம் மழை பெய்து குளத்தின் நீர் மட்டம் உயர்வடைந்தால் சிறுபோகம் சாத்தியமாகும் எனவும் இல்லை எனில் தற்போதுள்ள குளத்தின் நீர் மட்டத்தினை கொண்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது சாத்தியமற்றது. குளத்தின் நீர் மட்டம் தொடர்ச்சியாக 10 அடியாகப் பேணப்படவேண்டும்.எனவே எஞ்சிய ஆறு அடி நீரில் சிறுபோகம் செய்வது என்பதே பிரச்சினைக்குரிய விடயம் எனவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (அ)

## மகிந்தானந்தவின் மனு விசாரணைக்கு

கொழும்பு, பெப்.20

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தாக்கல் செய்துள்ள ரிட் மனுவை, எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இலஞ்சக் குற்றச்சாட்டு வழக்கினை மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதனை, தடுக்கும் வகையில் உத்தரவிடுமாறு கோரி முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான, மகிந்தானந்த அளுத்கமகே குறித்த ரிட் மனுவினை தாக்கல் செய்துள்ளார். (அ)

## கஞ்சா கடத்தியவர் கைது

கிளிநொச்சி, பெப்.20

கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு கேரளக் கஞ்சாவினை கடத்தி சென்றவரை நேற்று முன் தினம் வவுனியாப் பொலிஸார் பழைய பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு கஞ்சா கடத்துவதாகப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், வவுனியா பழைய பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கிடமாக நின்றவரை, சோதனையிட்ட போதே 2 கிலோ 10 கிராம் கேரளா கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது. (அ)






## மணியகாரன்தோட்ட அ.த.க மெய்வல்லுநர்

வடமராட்சி, பெப்.20

கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி, பாடசாலை அதிபர் கு.பாஸ்கரன் தலைமையில் இன்று திங்கட்கிழமை மதியம் 2மணியளவில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வலயக் கல்வி பணிப்பாளர் சி.நந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக க.இரத்தினம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ-11)







## ஸ்பீக்கர் போட்டுக் கத்திச் சொன்னால்தான் கேக்கும் போலை..

இனி என்ன திருவிழாக்கள் மெல்ல மெல்லத் துவங்கிவிடும். சனத்துக்குக் கொண்டாட்டமோ இல்லையோ, கோயில்காரருக்கும் ஐயர்மாருக்குந்தான் கொண்டாட்டம். முந்திமாதிரி இல்லை. கோயிலுக்கும் சனம் இப்ப தியேட்டருக்குப் படம் பாக்கப் போற மாதிரித்தானே போட்டு வருகினம். பக்தியைச் சனம் கழட்டி வித்துக் கன நாளாப்போச்செண்டு நினைக்கிறன். நல்லூர்தொட்டு நயினாதீவுவரை சனம் களியாட்டத்துக்குப் போற மாதிரித்தானே போட்டு வருகினம். போறது, அரிச்சனைத் தட்டை வாங்கிறது. குடும்பத்திலை இருக்கிற இல்லாத எல்லாற்றை பேரையும் சொல்லி அருச்சனை செய்யிறது. ஐயற்றை கையுக்கை ஒரு நோட்டைத் தாட்டுப் போட்டு வாற வழியிலை உண்டியலுக்கையும் ஒரு நோட்டைத் தள்ளிப் போட்டு, அன்னதான மடமிருந்தால் அதிலை போய் ஒரு வெட்டு வெட்டிப் போட்டு வாறது. அதோடை கடவுள் எல்லாவித அனுக்கிரகத்தையும் அவைக்குக் குடுத்துவிடுவார். அதிலை கொஞ்சத்தை அப்ப பாவிக்கிறது. மிச்சத்தைக் கட்டி அலுமாரிக்கை வைக்கிறது. அடுத்த முறை போகும் வரைக்கும் பாவிக்கிறதுக்கு எண்டு சனத்தின்ரை பக்தியும் பொழுது போக்குமாதிரிப் போகுது.

இதுக்கை ஆகலும் ஒரு மோசமான காரியம் என்னெண்டால் திருவிழாவிலை பனையளவு உயர ஸ்பீக்கரை வைச்சுப் பாட்டுப் போடுறது. பிறகு அறிவித்தல் எண்ட போர்வையிலை கத்திறது. கோயிலுக்கெண்டு போற சனத்தின்ரை காதுச் சவ்வு கிழிஞ்சுபோம். அவ்வளவு சத்தத்திலை கும்பிட எண்டு போற கொஞ்ச நஞ்சச் சனமும் கும்பிடாமல் திரும்பி வந்திடும்.

நீங்கள் பாத்திருப்பியள் மைதானம் வழியப் பேய் கலைக்கிற கூட்டங்கள் வைப்பினம். அவையும் உப்பிடித்தான் இருபது முப்பது ஸ்பீக்கர் பெட்டியளை ஒண்டுக்கு மேலை ஒண்டு அடுக்கிக் கத்தி நிக்கிற எல்லாருக்கும் பேய் பிடிக்க வைக்கிறது. ஏனெண்டால் அதுதான் அவைக்குந் தேவை. அப்பிடிக் கூட்டத்துக்கு வாற சனத்திலை அரைவசாசிக்குத் தன்னும் பேய் பிடிக்க வேணும் எண்டதுதான் அவையின்ரை நோக்கம். அப்பிடிப் பிடிச்சால்தான் அவைக்குக் கூட்டம் சக்ஸஸ்.

ஏனெண்டால் சுற்றுப் புறச் சூழல் மாசு படுதல் எண்டதிலை கலாநிதிப்பட்டம் எடுத்துக் கொண்டு கந்தையா வாத்தியாற்றை மேன் வெளிநாட்டிலை இருந்து வந்திருக்கிறான். அவன் போன மாசம் கலியாணம் ஒண்டுக்கு வந்தாப்போலை அங்கை போட்டிருந்த ஸ்பீக்கரின்ரை சத்தம் கூடிப்போச்செண்டு கதைக்கேக்கை தான் பல விசியத்தைச் சொன்னவன். சூழலை மாசு படுத்திறதிலை சத்தத்துக்கும் பெரிய பங்கிருக்கெண்ணுறான் அந்தப் பெடியன். அவன் சொல்லுறதைக் கேட்டால் தலை விறைக்கும். சத்தம் கூடினால் சிலருக்கு விசரும் வருமாம். இது ஏன் எங்கடை ஆக்களுக்கு விளங்கேல்லை?

இரண்டு நாளைக்கு முன்னம் ஒரு கிறிஸ்தவச் சேர்ச்சிலை திருவிழா எண்டு போனம். அதுகும் காணிவேல் மாதிரித்தான். அங்கையும் ஸ்பீக்கருகள் கட்டித் தொங்கவிட்டுக் கத்தின கத்திலை திரும்பி வந்திட்டம். பள்ளி வாசல், பன்சல எண்டு எல்லா இடத்திலையும் உந்தக் கேடு கெட்ட பழக்கம் இருக்கு. தொழுகை நேரத்தைச் சொல்ல ஒரு பள்ளிவாசலின்ரை ஸ்பீக்கர் சத்தம் போதாதே? கூட்டுக்கச்சேரி மாதிரி எல்லாரும் ஸ்பீக்கரைப் போட்டுக் காது கிழியக் கத்திறதுக்குப் பேர்தான் பக்தியோ? எனக்கெண்டால் ஒண்டும் விளக்கமில்லாமல் இருக்கு. நான் நினைக்கேல்லை ஒரு சமயத்திலை எண்டாலும் அவையின்ரை வேதப் புத்தகத்திலை ஸ்பீக்கர் போட்டுக் கத்தச் சொல்லி எழுதிக் கிடக்கெண்டு. இடையிட்டு வந்த எத்தினை அரியண்ட வேலையள் எல்லாத்தையும் குழப்பிப் போட்டிருக்கு?

பக்தி அமைதியாத்தான் வரவேணும். அதுதான் அந்தக் காலத்திலை தவஞ் செய்யக் காட்டுக்கை போனவை. நாட்டிலை அமைதி இல்லை எண்டுதானே அவை காட்டுக்கை போனவை. உப்பிடிக் கத்திக் குளறிப் பாட்டுப்போட்டு வாறது பக்தி இல்லை. அதுக்குப் பேர் "பைலா" ஆட்டம். குடிச்சிட்டு ஆடுறதுக்குத்தான் உப்பிடிப் பாட்டை ஸ்பீக்கர் வைச்சுப் போடுறது. நல்ல சனம் இருக்கிற இடத்திலை உப்பிடிச் செய்யப்பிடாது. இனி உதை உவையளுக்கு விளங்கப்படுத்த நாங்கள் ஸ்பீக்கர் வைச்சுத்தான் காது கிழியக் கத்தவேணும்போலை கிடக்கு.

- வில்லங்கம் விநாசி

# வாக்குவாதத்தால் பறிபட்டது உயிர்

திருகோணமலை, பெப்.20

திருகோணமலை, சாம்பல்தீவுப் பகுதியில், வீட்டு உரிமையாளருக்கும் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தவருக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதத்தில், வீட்டு உரிமையாளர் கத்திக் குத்துக்கு இலக்காகி, உயிரிழந்தார்.

நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில், சாம்பல்தீவு, 06ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகசிங்கம் கேதீஸ்வரன் (41 வயது) என்பவரே மரணமானார்.

சாம்பல்தீவு பாடசாலைக்கருகில் இருக்கின்ற வீட்டை வாடகைக்குக் கொடுத்து விட்டு, வாடகைப் பணத்தை வாங்குவதற்காகச் சென்ற போது, வீட்டில் வாடகைக்கு இருந்தவருடன் தார்க்கம் ஏற்பட்டதையடுத்து, வீட்டு உரிமையாளர் கத்திக்குத்துக்கு இலக்காகினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். சடலம், திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும், வீட்டில் வாடகைக்கு குடியிருந்தவரைக் கைது செய்துள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், நிலாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கடற்படைக்கு எதிராக மீனவர்கள் போராட்டம்



மன்னார், பெப்.20

மன்னார் 'தீடை' பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்டுவரும் தலைமன்னார் கிராம மீனவர்களுக்கு கடற்படையினர் தொடர்ந்தும் இடையூறு ஏற்படுத்தி வந்த நிலையில் நேற்று இரவு தீடை பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற ஒரு தொகுதி மீனவர்களை கடற்படையினர் திருப்பி அனுப்பியதை கண்டித்து தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் நேற்று பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஒன்று கூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தலைமன்னார் கிராம மீனவர்கள் பரம்பரை பரம்பரையாக தீடை பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த காலங்களில் எவ்வித பிரச்சினைகளும் இன்றி மீனவர்கள் சுதந்திரமாக மீன் பிடியில் ஈடுபட்டு வந்தனர். அண்மைக்காலமாக தலைமன்னார் கிராமத்தில் இருந்து தீடைக்கு மீன் பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு தொடர்ச்சியாக கடற்படையினர் இடையூறை ஏற்படுத்தி வந்துள்ளதோடு, மீன் பிடிக்க அனுமதி மறுத்துள்ளனர். குறிப்பாக குறித்த தீடை பகுதியில் பறவைகள் வந்து செல்வதாக கூறி வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் கடற்படையூடாக மீனவர்களை மீன் பிடிக்க அனுமதியை மறுத்துள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

எனினும் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களம் குறித்த தீடைப்பகுதிக்குச் சென்று மீன் பிடிக்க மீனவர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளனர். எனினும் தொடர்ச்சியாக கடற்படையினர் மீனவர்களுக்கு அனுமதியை மறுத்து வந்துள்ளனர். இதனால் தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வந்த நிலையில் தமது பிரச்சினை தொடர்பில் தலைமன்னார் பொலிஸ், மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ,அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு எழுத்து மூலம் தமது பிரச்சினை தொடர்பில் மகஜர் கையளித்திருந்தனர்.

எனினும் மீனவர்களின் கோரிக்கைக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. மீனவர்கள் தொடர்ச்சியாக கடற்படையினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தீடை பகுதிக்குச் சென்று மீன் பிடியில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த நிலையில் நேற்று இரவு தலைமன்னார் கிராமத்தில் இருந்து தீடை பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற நூற்றுக்கணக்கான மீனவர்களை கடற்படையினர் மீன்பிடியில் ஈடுபட விடாததோடு,அச்சுறுத்தி திருப்பி அனுப்பியுள்ளனர்.

# சுதந்திரக் கட்சி அரசில் தொடரும்

கொழும்பு, பெப்.20,

கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகுவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

நற்று நண்பகல் மைத்திரிபால சிறிசேனவுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் நடத்திய பேச்சுக்களை அடுத்தே, இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க, அரசாங்கத்தில் சட்டரீதியாக பாரியதொரு மாற்றம் நிகழும் என்றும், ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறாது என்றும் தெரிவித்துள்ளார்.

பிரதமரை மாற்றுவது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதாகவும், அதனை வெளிப்படுத்த முடியாது என்றும் கூறிய எஸ்.பி.திசநாயக்க, பிரதமரை மாற்றுவதற்கு அரசாங்கத்தில் உள்ள சிலர் விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டார்.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும், ஏனைய கட்சிகளுக்குத் தாவப் போவதில்லை என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்திருந்து அவரது கரங்களைப் பலப்படுத்தப் போவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

## இன்றைய கேலிச்சித்திரம்




# 15 பேருடன் வருவேன்

## மகிந்தவிடம் சுசில் உறுதிமொழி

கொழும்பு, பெப்.20,

வார இறுதிக்குள் ஐக்கிய தேசியக் கட்சி இல்லாத அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்கத் தவறினால், தாம் உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டு எதிரணிக்கு வந்து விடுவோம் என்று அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த உறுதி கூறியுள்ளார்.

சுதந்திரக் கட்சின் தேசிய அமைப்பாளரான சுசில் பிரேமஜெயந்த கடந்த வெள்ளிக்கிழமை முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவுடன் நடத்திய சந்திப்பின் போதே, இந்த உறுதிமொழி வழங்கியுள்ளார். தற்போதைய கூட்டு அரசாங்கம் மக்களின் ஆணையை இழந்து விட்டது. எனவே, அதிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ச அனைவரையும் தாம் வரவேற்பதாக குறிப்பிட்டார். (இ)

# தொடர்ச்சிகள்

## 10 ஆண்டுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்று சட்ட மா அதிபரிடம் வழக்குக் கோவைகள் பாரப்படுத்தப்பட்டன. சட்ட மா அதிபரால் யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு, நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகளின் முடிவில், தங்கையை வன்புணர்வு செய்த குற்றத்துக்காக 10 ஆண்டுகள் கடூழிய சிறையும், இரண்டாவது தடவையாகவும் வன்புணர்வு செய்த குற்றத்துக்காகவும் 10 ஆண்டுகள் கடூழியச் சிறையும் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என விதிக்கப்பட்டது.

அத்துடன், சிறுமிக்கு 2 இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகையும், வழங்கத் தவறின் 2 ஆண்டுகள் கடூழிய சிறையும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் கட்டத் தவறின் 2 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என்று நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (ச)

## விட்டுவைக்காத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருவிழா வரும் 23, 24 ஆம் திகதிகளில் இடம்பெறுகிறது. இதில், இம்முறை முதன்முதலாக சிங்கள மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. காலி மறைமாவட்ட ஆயர் ரேமன் விக்ரமசிங்க சிங்கள மொழியில் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார்.

இம்முறை எமது நாட்டையும், இந்தியாவையும் சேர்ந்த 10 ஆயிரம் பக்தர்கள் இப்பெருவிழாவில் பங்கேற்கவுள்ளனர். சிங்கள மக்களும் அதிகளவில் கலந்து கொள்வதால் சிங்களத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்" - என்றார்.

இதுவரை காலமும் தமிழில் மட்டுமே திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வந்தமை நினைவில்கொள்ளத்தக்கது. (ச)

## உயர்நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அரசாங்கத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விலகுவது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு சிக்கலை ஏற்படுத்தக் கூடும் என ஜனாதிபதி கூறினார். அப்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டால், என்ன செய்வது என்று சட்டமா அதிபரிடம் கலந்துரையாடி விட்டு தெரிவிப்பதாக ஜனாதிபதி கூறினார்.

தேசிய அரசாங்கம் இல்லாத சந்தர்ப்பத்தில் அதுபற்றி தெளிவுப்படுத்த முடியாது என சட்டமா அதிபர் கூறியுள்ளார். இது குறித்து ஜனாதிபதியால் மாத்திரமே உயர் நீதிமன்றத்தின் நிலைப்பாட்டை அறிய முடியும். உயர் நீதிமன்றத்தின் விளக்கத்தை அறியுமாறு சட்டமா அதிபர், ஜனாதிபதியிடம் தெரிவித்தார். நேற்று (முன்தினம்) இரவு இப்படியான நிலைமையே காணப்பட்டது.

இன்று (நேற்று) மதியம் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரை ஜனாதிபதி அழைத்தார். உயர்நீதிமன்றத்தின் பதில் கிடைக்கும் வரை நாட்டின் நிலைமையை அப்படியே முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனக் கூறினார். (இ)

## தமிழீழம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா. சம்பந்தன்.

'நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் அவரது பொது ஜன முன்னணியும் மிகவும் கீழ்த்தரமாக தேர்தல் பிரச்சாரம் செய்திருந்தார்கள். அரசாங்கத்திற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அளிக்கப்படும் வாக்குகள் தமிழீழம் உருவாக வழிவகுக்கும் என அப்பாவிச் சிங்கள மக்களை வழிநடத்தி இருந்தார்கள். இது மிகவும் தவறானது. சாதாரண சிங்கள மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம்" என்றும் சம்பந்தன் கூறினார்.

நேற்று நாடாளுமன்றில் விசேட விவாதம் இடம்பெற் றது. இதன்போது ஆளும் மற்றும் பொது எதிரணியினர் இடையே பலத்த வாக்குவாதங்கள் ஏற்பட்டு, குழப்பங்கள் நீடித்தன. ஆனால் சம்பந்தன் உரையாற்றியபோது எவரும் வாய் திறக்கவோ குறுக்கீடு செய்யவோ இல்லை. அமைதியாக அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தனர். (ச -இ)

# ஈரான் விமான விபத்து வெளிவரும் அதிர்ச்சிகள்




ஈரான், பெப். 20

66 பேரின் உயிரிழப்புக்குக் காரணமான ஈரான் விமான விபத்தின் அதிர்ச்சி பின்னணி குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

அசெமன் ஏயர்லைன்ஸ் ஈரானின் பழமையான விமான நிறுவனம் ஆகும். ஆனால் விமான நிறுவனம் மட்டுமல்ல அதன் விமானங்களும் மிகப்பழமையானவை என்னும் உண்மை தற்போது வெளிவந்துள்ளது.

1979 முதல் கடந்த ஞாயிறன்று ஏற்பட்ட விமான விபத்து வரை இதுவரையில் சுமார் 1700 விமானப் பயணிகள் உயிரிழந்துள்ளனர்.

ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளின் காரணமாக எந்த நாடும் அதற்கு விமானங்களை விற்பனை செய்ய முன்வராத காரணத்தால் அந்நாடு மிகப்பழைய விமானங்களையே பயன்படுத்தி வருகிறது. இதனாலேயே அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றன என்னும் தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


இந்நிலையில் விமானப்பயணம் தொடர்பாக இரண்டு விமானப் பயணிகள் வெளியிட்ட செய்திகள் வைரலாகி வருகின்றன.

அதில் ஒருவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் விமானத்தின் 'புரொப்பெல்லர்' இருந்த மோசமான நிலையைப் பார்த்து அதைத் தன் தோழிக்கு படம் எடுத்து அனுப்பி விட்டு "பத்திரமாக வீடு போய்ச் சேர ஆண்டவன்தான் எங்களுக்கு உதவ வேண்டும்" என்று செய்தியும் அனுப்பியுள்ளார். அவர் அஞ்சியது போலவே நடந்து விட்டது.

இன்னொரு பயணியின் செய்தியோ ஒரு பக்கம் மகிழ்ச்சியையும் மற்றொரு பக்கம் துயரத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

அந்த விமானத்தில் சென்றிருக்க வேண்டிய அவர் விமானத்தைத் தவறவிட்டார், அதனால் அவர் இன்று உயிருடன் இருக்கிறார்.

"கடவுள் உண்மையாகவே என் மீது கருணை கொண்டுள்ளார் என்று தெரிவித்திருக்கும் அவர், உயிரிழந்த அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து என் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று வேதனையுடன் கூறியுள்ளார். (ஐ)



## விஜயகாந்தைச் சந்தித்த கமல் திராவிட அரசியலில் உறுதி

சென்னை, பெப். 20

சென்னையில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தைச் சந்தித்து வாழ்த்துப் பெற்ற கமல், திராவிட அரசியலை பின்பற்றி வெற்றி பெற்றுக் காட்டுவேன் எனக் கூறினார்.

நடிகர் கமல்ஹாசன் நாளை இராமேஸ்வரத்தில் உள்ள அப்துல் கலாம் வீட்டிலிருந்து தனது அரசியல் பயணத்தை தொடங்குகிறார். அங்கிருந்து சுற்றுப்பயணம் செய்து மக்களைச் சந்தித்து பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள இருக்கிறார்.

அரசியல் கட்சி தொடங்குவதற்கு முன்பாக முக்கிய தலைவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்று வருகிறார். அவ்வகையில், நேற்றுமுன்தினம் நடிகர் ரஜினியை போயஸ் தோட்ட இல்லத்தில் சந்தித்தார்.

அதன்பின்னர், கோபாலபுரம் இல்லத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியை கமல் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிலையில், தே.மு.தி.க. பொதுச்செயலாளர் விஜயகாந்தை, நடிகர் கமல் நேற்றுச் சந்தித்தார். கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

இந்தச் சந்திப்புக் குறித்து கமல் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

"எனது அரசியல் பயணத்துக்கு, அரசியலில் மூத்தவரான விஜயகாந்தைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். நண்பர் விஜயகாந்தைச் சந்தித்து நீண்ட நாட்கள் ஆவதால் இன்று (நேற்று) நேரில் சந்தித்து உடல்நலம் விசாரித்தேன். அப்போது நீங்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்று என்னை வாழ்த்தினார். திராவிட அரசியலை பின்பற்றி வெற்றி பெற்று காட்டுவேன்" என்றார்.(ஐ)

# சர்ச்சையைக் கிளப்பிய இளவரசியின் உடை

லண்டன், பெப். 20

'பெவ்ரா' எனப்படும் பிரிட்டன் விருதுகள் வழங்கும் விழாவில் பங்கு பற்ற இளவரசி கேட் மற்றவர்களைப்போல் கறுப்பு உடை அணியாமல் வந்ததால் விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளார்.

ஜனவரி மாதம் நடைபெற்ற கோல்டன் குளோப்ஸ் மற்றும் கிரேமி விருதுகள் வழங்கும் விழாக்களில் பங்கு பெற்ற பிரபலங்கள் சினிமாத் துறையில் காணப்படும் பாலியல் வன்முறை மற்றும் ஆண் - பெண் சமத்துவமின்மைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கறுப்பு நிற உடையும் வெள்ளை ரோஜாக்களும் அணிந்து வந்தனர்.

அதேபோல் பெவ்ரா விழாவுக்கும் கறுப்பு உடை அணிந்து வர வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

இந்த நிலையில் விழாவில் பங்கேற்கவிருந்த இளவரசி கேட் கறுப்பு உடை அணிவாரா என்னும் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது.

அவ்வளவு எதிர்பார்ப்புகளுக்கிடையில் விருதுகள் வழங்கும் விழாவில் பங்கெடுக்க வந்த இளவரசி கேட் கறுப்பு உடை அணியவில்லை.

அதே நேரத்தில் பச்சை நிறத்திலும் உடையணிந்த இளவரசி நம்பிக்கைக்கு அடையாளமான பச்சை நிற உடையணிந்து வந்தது பலரது வரவேற்பைப் பெற்றது. எனினும் சிலர் அதையும் விமர்சித்துள்ளனர்.

அவற்றில் சில விமர்சனங்கள் மோசமானவையாக இருந்தன. இது கண்டு கொதித்துப் போன சிலர் வரிந்து கட்டிக் கொண்டு இளவரசிக்கு ஆதரவாக டுவீட்களை வெளியிட்டுள்ளனர்.

"இளவரசியின் உடைத் தேர்வு புத்திசாலித்தனமானது, அரண்மனைக் கட்டுப்பாடுகளிலிருந்து விலகவும் இல்லை, அதே நேரத்தில் அடர் வண்ண உடை அணிந்ததால் பெண்களுக்கு அவர் தன் ஆதரவையும் தெரிவித்துள்ளார்" என்று கூறியுள்ளார்.

ராஜ குடும்பத்தினர் கறுப்பு நிற உடையை மரணம் போன்ற துக்க நிகழ்ச்சிகளில் மட்டுமே அணிவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மாலைதீவு அரசியலில் திடீர் திருப்பம்

நெருக்கடி நிலை அமுலில் இருக்கும் மாலைதீவில் அதிபர் யாமீனுக்கு ஆதரவாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 12 பேரை இடைநீக்கம் செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாலைதீவில் அரசியல் காரணங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித்தலைவர்களை விடுவிக்க இம்மாதம் உத்தரவிடப்பட்டது. மேலும், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 12 பேரை தகுதி நீக்கம் செய்தது செல்லாது எனவும் தலைமை நீதிபதி அறிவித்தார்.

நீதிமன்ற உத்தரவின் படி, தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்.பி.க்கள் நாடாளுமன்றத்துக்கு வந்தால் அதிபர்யாமீன் அரசுக்கு பெரும்பான்மை கிடைக்காது என்பதால் அவர்களின் தகுதி நீக்கத்தை ரத்துச்செய்ய அதிபர் மறுத்துவிட்டார். மேலும், சிறையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களை விடுவிக்க நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையும் ஏற்க முடியாது என அதிபர் யாமீன் தெரிவித்தார்.



இதனால், யாமீனை அதிபர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்ய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி காய் நகர்த்தினார். தனது பதவி பறிபோகும் நிலை ஏற்பட்டதால், கடந்த 5ஆம் திகதி நெருக்கடி நிலையை அதிபர் பிரகடனம் செய்தார். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி கைது செய்யப்பட்டார். நாடாளுமன்றம் தற்காலிகமாக முடக்கப்பட்டது.

இன்றுடன் நெருக்கடி நிலை முடிவடையும் நிலையில், 12 எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டது செல்லாது என முன்னர் பிறப்பித்த உத்தரவிலிருந்து உச்ச நீதிமன்றம் மாறியுள்ளது. மீண்டும் அவர்கள் 12 பேரும் தகுதி நீக்கம் செய்யப்பட்டு புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால், அதிபர் யாமீனின் அரசுக்கு இருந்த சிக்கல் தற்காலிகமாக விலகியுள்ளது. மேலும், சிறையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களை விடுவிக்க வேண்டும் என முன்னர் பிறப்பித்த உத்தரவையும் நீதிபதிகள் திரும்பப்பெற்றுள்ளனர். அதிபருக்கு ஆதரவான நீதிபதி, தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.(ஐ)

## மற்றொரு ஆடை விலகல்

தென் கொரியாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக்கில் பிரான்ஸ் சார்பில் பனிச்சறுக்கு நடனப்போட்டியில் பங்கேற்ற கேப்ரில்லா பபாடாகிஸ் (22) என்ற வீராங்கனை தனது ஜோடியான குயிலுமி சிசிரோனுடன் சேர்ந்து பனிச்சறுக்கு நடனப்போட்டியில் பங்கேற்றபோது கேப்ரில்லாவின் மேலாடை விலகியது.

ஆனால் அதைசமாளித்தவாறு அவர் குயிலுமியுடன் நடனமாடி முடித்தார்.

ஏற்கனவே சில தினங்களுக்கு முன்னர் தென் கொரிய வீராங்கனை யுரா மின்னின் மேலாடை இதே போல போட்டியின் போது விலகியமை குறிப்பிடத்தக்கது.(ஐ)



## வித்யாபாலன் இடத்தில் 'ஜோ'




வித்யா பாலன் நடித்துள்ள 'தும்ஹரி சுலு' என்ற ஹிந்திப் படத்தின் தமிழ் ரீமேக்கில் ஜோதிகா நடிக்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதில் திருமணமான நடுத்தர வயதுப் பெண்ணான வித்யா பாலனின் குறிக்கோளும், வானொலி அறிவிப்பாளராகி சாதிப்பதும் தான் கதையாகும்.

வித்தியாபாலன் நடித்துள்ள வேடத்தில் ஜோதிகா நடிப்பார் என்றும் இந்தப் படத்தை ராதா மோகன் இயக்கப் போகிறார் எனவும் தகவல் வெளியாகி உள்ளது. இவர் ஜோதிகா, பிரகாஷ் ராஜ் நடித்த மொழி படத்தை இயக்கியவர்.

இதுபற்றி ஜோதிகா கூறும் போது,

படத்தயாரிப்பாளர்கள் இது தொடர்பாக என்னை அணுகினார்கள். இன்னும் ஒப்பந்தம் முடிவாகவில்லை. வித்யாபாலன் நடித்துள்ள அந்த ஹிந்திப் படத்தை நான் பார்த்தேன். மிக நன்றாக இருக்கிறது. இப்போதைக்கு 'செக்கச்சிவந்த வானம்' படத்தில் நடித்துக்கொண்டு இருக்கிறேன். நான் சம்பந்தப்பட்ட காட்சிகள் மார்ச் மாதத்தில் முடிவடைகிறது. அதன்பிறகு மே அல்லது ஜூன் மாதத்தில் 'தும்ஹரி சுலு' படப்பிடிப்பு தொடங்கும் என்றார்.

(ஐ)

# மீண்டும் மலிங்க!



கொழும்பு, பெப். 20

முத்தரப்புத் தொடரில் மீண்டும் களமிறங்கவுள்ளார் இலங்கை அணியின் நட்சத்திர வீரர் லசித் மலிங்க.

இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சரின் நடவடிக்கைக்குப் பின்னர் கடந்தாண்டு செப்ரெம்பர் முதல் எந்தவொரு போட்டியிலும் பங்கேற்காமல் விலகியிருந்தார் இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க.

இதனால் அவரது ரசிகர்கள் சோர்வடைந்திருந்த நிலையில், ஐ.பி.எல். ஏலத்திலும் மலிங்க எடுக்கப்படாதது அவருக்கு மேலும் ஏமாற்றமாக அமைந்தது. எனினும், உள்நாட்டுப் போட்டிகளில் பங்கேற்று சிறப்பான ஆட்டத்தை மலிங்க வெளிப்படுத்தும் பட்சத்தில் மீண்டும் அவர் அணிக்குள் சேர்க்கப்படுவார் என்ற தகவல்கள் பரவி வந்தன.

இந்நிலையில், அடுத்த மாதம் தொடங்கவிருக்கும் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் அணிகள் பங்குபெறும் முத்தரப்புத் தொடரில் மீண்டும் மலிங்க சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனால் அவரது ரசிகர்கள் பெரும் உற்சாகம் அடைந்திருந்தாலும் மலிங்காவின் உடல் தகுதியைப் பொறுத்தே அவரது தெரிவு இருக்கும் என்று இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விலகினார் வில்லியர்ஸ்



இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இருபது-20 தொடரிலிருந்து தென்னாபிரிக்க நட்சத்திர வீரர் டிவில்லியர்ஸ் விலகியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய கிரிக்கெட் அணி ஒருநாள் தொடரை அபாரமாக வென்றது. இதையடுத்து மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரின் முதல் போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் இந்தியா வெற்றி பெற்றது.

இப்போட்டியிலிருந்து காயம் காரணமாக தென்னாபிரிக்காவின் நட்சத்திர வீரர் டிவில்லியர்ஸ் கடைசி நேரத்தில் விலகினார்.

எனினும், மீதமுள்ள இரண்டு போட்டிகளில் அவர் பங்கேற்பார் என எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில், அதிலும் அவர் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)



# முன்னணி அணிகள் வெற்றி

லா லிகா தொடரில் இந்த வாரப் போட்டிகளில் ரியல் மாட்ரிட், பார்சிலோனா, அட்லெடிகோ டி மாட்ரிக் அணிகள் வெற்றி பெற்றன.

ஸ்பெயினில் உள்ள கால்பந்து கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் லா லிகா தொடரின் இந்த வாரப் போட்டிகளில் முன்னணி அணிகளான பார்சிலோனா, ரியல் மாட்ரிட் அணிகள் களம் இறங்கின.

ஓர் ஆட்டத்தில் ரியல் மாட்ரிட், ரியல் பெட்டிஸ் அணியை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் 8 கோல்கள் அடிக்கப்பட்டன. சொந்த மைதானத்தில் ரியல் பெட்டின் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 3 கோல்கள் அடித்தது. இருந்தாலும் ரியல் மாட்ரிட் 5 கோல்கள் அடித்தது.

நட்சத்திர வீரர் ரொன்பால்டோ 65ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். மார்கோ அசென்சியோ 11ஆவது மற்றும் 59ஆவது நிமிடத்தில் இரண்டு கோல்கள் அடித்தார். செர்ஜியோ ரமோஸ் 50ஆவது நிமிடத்திலும், பென்சிமா 92ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

மற்றொரு ஆட்டத்தில் அட்லெடிகோ டி மாட்ரிட் - அத்லெடிக் அணிகள் மோதின. இதில் அட்லெடிகோ டி மாட்ரிட் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் ரியல் சோசியேடாட் - லெவன்டே அணிகள் மோதின. இதில் 3-0 என ரியல் சோசியேடாட் வெற்றி பெற்றது.

மலாகா சிஎஃப் - வாலென்சியா இடையிலான ஆட்டத்தில் 2-1 என வாலென்சியாக வெற்றி பெற்றது. டெபோர்ட்டிவோ அணியை 1-0 என அலெவ்ஸ், எய்பரை 2-0 என பார்சிலோனா, லொஸ் பல்மாஸ் அணியை 2-1 என செவியாவும், ஜிரோனாவை 3-0 என லெகேன்ஸ் அணியும் வென்றன. (ஐ)

# ஒரே போட்டியில் 9 சிவப்பு அட்டை

பிரேஸில், பெப்.20

பிரேஸிலில் நடைபெற்ற மாநில உதைபந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு போட்டியில் விட்டோரியா – பகியா அணிகள் மோதின. விட்டோரியாவுக்குச் சொந்தமான மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 33 ஆவது நிமிடத்தில் விட்டோரியா முதல் கோலை பதிவு செய்தது.

பின்னர் 2 ஆவது பாதி நேரம் ஆட்டம் தொடங்கியதும் நான்காவது நிமிடத்தில் பகியா அணிக்கு 'பனால்டி' வாய்ப்பு கிடைத்தது. இதைப் பயன்படுத்தி அந்த அணியின் வினிசியஸ் கோல் அடித்தார். அத்துடன் விட்டோரியா ரசிகர்கள் முன் சென்று ஆத்திரமூட்டும் வகையில் வினிசியஸ், நடனம் ஆடினார்.

இதனால் கோபம் அடைந்த விட்டோரியா அணி கோல் காப்பாளர் வினிசியஸைத் தாக்கினார். அவருடன் சில வீரர்களும் தாக்குதல் நடத்தினார்கள். இதற்கு பகியா அணி வீரர்களும் பதில் தாக்குதல் நடத்தினார்கள். இதனால் போட்டி வன்முறையாக மாறியது. இந்த வன்முறை காரணமாக பகியா அணியின் 3 வீரர்களும், விட்டோரியா அணியின் 3 வீரர்களும் சிவப்பு அட்டை கொடுத்து வெளியேற்றப்பட்டனர்.

ஆட்டம் தொடங்கிய சில நிமிடங்களில் இரு அணிகளில் இருந்து மேலும் தலா ஒவ்வொரு வீரர்கள் சிவப்பு அட்டை மூலம் வெளியேற்றப்பட்டனர். ஆட்டம் முடிவடைவதற்கு 13 நிமிடங்களுக்கு முன் விட்டோரியாவின் பிஸ்போ என்ற வீரர் இரண்டு மஞ்சள் அட்டை மூலம் வெளியேற்றப்பட்டார்.

இதனால் 9 வீரர்கள் சிவப்பு அட்டை மூலம் வெறியேற்றப்பட்டனர். விட்டோரியா அணியில் 5 வீரர்கள் வெளியேற்றப்பட்டதால், 6 வீரர்களே இருந்தனர். 6 வீரர்கள் மூலம் போட்டியை நடத்த இயலாது என்பதால் போட்டி அத்துடன் கைவிடப்பட்டது. (அ)

## நாவாந்துறை உதைபந்தாட்டத் தொடர்:

# குறிஞ்சிக்குமரனை வென்றது பலாலி விண்மீன் வி.கழகம்

நாவாந்துறை, பெப். 20

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பலாலி விண் மீன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

நேற்று மாலை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் 3:1 என்ற கோல் கணக்கில் விண்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (ஐ)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 20.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.